**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 327** **நாள்: 24.07.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு-2027னை முன்னிட்டு, முதற்கட்டமாக சுய கணக்கெடுப்பு 17.07.2026 முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.**

**வருகின்ற 31.07.2026க்குள் பொதுமக்கள் இந்த சுய கணக்கெடுப்பில் பங்கேற்று தங்களது சுய விவரங்களை https://se.census.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் முதற்கட்டப் பணிகள் 17.07.2026 அன்று தொடங்கியுள்ளது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது வெறும் மக்கள் எண்ணிக்கையைக் கணக்கிடும் பணி மட்டுமின்றி, எதிர்கால வளர்ச்சிக்கான அடித்தளமாகவும் அமைகிறது.

கல்வி, மருத்துவம், குடிநீர், சாலை, வீட்டு வசதி, சமூகப் பாதுகாப்பு, மக்கள் நலத் திட்டங்கள் என அரசின் அனைத்து திட்டங்களையும் சரியாகத் திட்டமிடுவதற்கு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் தகவல்கள்தான் அடிப்படையாக அமைகின்றது. அதனால், ஒவ்வொரு குடும்பமும் சரியான தகவல்களை அளிப்பது மிகவும் முக்கியமாகும். இந்தியாவில் முதல்முறையாக, இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முழுமையாக டிஜிட்டல் முறையில் நடைபெறுகிறது.

இந்த கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது. முதற்கட்டமாக வீட்டுப் பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு 01.08.2026 முதல் 30.08.2026 வரை நடைபெறும். அதற்கு முன்பாக, 17.07.2026 முதல் 31.07.2026 வரை முதன்முறையாக சுயக் கணக்கெடுப்பு வசதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இதன் மூலம், மக்கள் தங்கள் வீட்டிலிருந்தபடியே தங்களது குடும்பத்தின் விவரங்களை இணையம் வழியாக தாங்களே https://se.census.gov.in என்ற சுய கணக்கெடுப்பு இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம். நீங்கள் வழங்கும் அனைத்து தகவல்களும் சட்டப்படி முழுமையான ரகசியத்துடன் பாதுகாக்கப்படும். எனவே எந்தத் தயக்கமும் இல்லாமல், உண்மையான மற்றும் துல்லியமான தகவல்களை வழங்கலாம்.

தங்களது சுய கணக்கெடுப்பை பதிவு செய்த பின் வழங்கப்படும் சுயகணக்கெடுப்பு பதிவு எண்ணை 01.08.2026 முதல் தங்கள் இல்லத்திற்கு வரும் கணக்கெடுப்பாளரிடம் வழங்கினால் போதுமானது.

சென்னையில் 17.07.2026 அன்று முதல் 24.07.2026 வரை 56 ஆயிரம் குடும்பங்கள் சுய கணக்கெடுப்பு மூலம் தகவல்களை பதிவேற்றம் செய்துள்ளனர். மக்கள் தாங்களாகவே தங்களது வீட்டில் இருந்தபடி தங்களது சுய விவரங்களை மிக எளிதாக https://se.census.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்திட முடியும்.

எனவே, சென்னையில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் மிக எளிதான இந்த சுயக் கணக்கெடுப்பின் வாயிலாக தங்களது சுய விவரங்களை பதிவு செய்திடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**